(6 pages) **Reg. No. : ...............................**

**Code No. : 8759** **Sub. Code : PTLM 23**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2019.

Second Semester

Tamil — Core

பக்தி இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "உழுத சால் வழியே உழுவான் பொருட்டு
இழுத நெஞ்சம் இது என்படுகிறது" - யார் கூற்று?

(அ) மாணிக்கவாசகர்

(ஆ) திருநாவுக்கரசர்

(இ) சம்பந்தர்

(ஈ) சுந்தரர்

2. தனித்திருக் குறுந்தொகை - பாடியவர் யார்?

(அ) பத்திரகிரியார் (ஆ) தாயுமானவர்

(இ) நாவுக்கரசர் (ஈ) சுந்தரர்

3. தக்கன், சுருக்கன், எச்சன், இந்து, அனல் - இவர்கள் யாரால் புண்பட்டனர்?

(அ) உருத்திரனால் (ஆ) இந்திரனால்

(இ) வீரபத்திரனால் (ஈ) நான்முகனால்

4. "புள்ளினை வாய்பிளந்திட்டாய் பொருகரியின் கொம்பு ஒசித்தாய்" என்று பாடியவர்

(அ) பெரியாழ்வார்

(ஆ) குலசேகராழ்வார்

(இ) திருப்பாணழ்வார்

(ஈ) நம்மாழ்வார்

5. கண்ணன் ஆடிய கூத்தின் பெயர் என்ன?

(அ) பாவைக்கூத்து (ஆ) கணியான் கூத்து

(இ) குடக் கூத்து (ஈ) மல்வர் கூத்து

6. அரவணையில் பள்ளி கொள்பவன் யார்?

(அ) திருமால் (ஆ) இந்திரன்

(இ) சிவன் (ஈ) பிரம்மன்



Nesamony Memorial Christian College, Marthandam

7. ரிஷபக் கொடி உடையவன் யார்?

(அ) சிவன்

(ஆ) அனுமன்

(இ) இராமன்

(ஈ) இந்திரன்

8. மும்மலமும் சேர்ந்து முளைத்து எழுந்தது எது?

(அ) உடல்

(ஆ) ஒளி

(இ) உயிர்

(ஈ) ஊண்

9. சாத்தானின் கோட்டையின் பெயர் என்ன?

(அ) பெயல் பூசல்

(ஆ) திட்டி வாசல்

(இ) நல்லறம்

(ஈ) வியன் கிரி

10. வம்படிக்கும் மாதருடன் வாழ்வது எதைப் போன்றது?

(அ) பூவும் மணமும்

(ஆ) புளியம் பழமும் ஓடும்

(இ) நகமும் சதையும்

(ஈ) உயிரும் உடலும்



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

11. (அ) நமச்சிவாய மந்திரத்தின் பெருமைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமழபாடிப் பதிகம் வழி அறியலாகும் சிவனின் தன்மைகள் யாவை-

12. (அ) பூச்சூட்ட அழைக்கும் கண்ணனின் செயல்களை பெரியாழ்வார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பிரிவாற்றாமையை ஆண்டாள் பாடல்கள் வழி விவரி.

13. (அ) குலசேகராழ்வார் கூறும் சேரக் கூடாதவர்கள் பற்றி விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) அரங்கத்தம்மானை திருப்பாணாழ்வார் கொண்டாடும் விதத்தை விளக்குக.

14. (அ) தாயுமானவர் பாடல்கள் சமரச நோக்கம் உடையவை என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) பத்திரகிரியார் பாடல்கள் வீடு பேற்றிற்கு வித்திடுவதை நும்பாடப்பகுதி வழி விளக்குக.



Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) திருமறைச் சுருளிலுள்ள அழியா நகரம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உண்மை விளக்கம் பாடல்வழி அறியலாகும் உண்மைகளை விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>600 சொற்களுக்கு</u> மிகாமல் <u>கட்டுரை வடிவில்</u> விடை தருக.

16. (அ) 'அன்பின் வழியது இறைநிலை' என்பதைப் பக்தி இலக்கியங்கள் கொண்டு நிறுவுக.

(அல்லது)

(ஆ) பக்தி இலக்கியங்கள் சமய நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்க எழுந்தவை என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

17. (அ) இரட்சணிய யாத்திரிகம் கூறும் பேருரையாளரின் அரண்மனையையும், அதன் தன்மைகளையும் எழுதுக.

(அல்லது)

(ஆ) அருணகிரிநாதரின் கந்தர் அனுபூதி முருகனின் பெருமைகளை எழுதுக.



18. (அ) விநாயகர் அகவல் மூலம் ஔவையார் கூறும் செய்திகளை கட்டுரை வடிவில் தருக.

(அல்லது)

(ஆ) கா.ப. செய்குத்தம்பி பாவலர் அவர்கள் கல்வத்து நாயகம் மீது கொண்ட பக்தியைக் கட்டுரை வடிவில் தருக.

19. (அ) பெண்கள் பற்றிய பத்திரகிரியாரின் கருத்துக்களை ஆராய்க.

(அல்லது)

(ஆ) திருமழபாடி தெய்வத்தை சுந்தரர் எவ்வாறு போற்றுகிறார் என்பதைக் கட்டுரை வடிவில் தருக.

20. (அ) உலகம் நிலையற்றது என்பதைத் தாயுமானவர் பாடல்கள் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பக்தி இலக்கியங்கள் அனைத்தும் மக்கள் வாழ்க்கையை நல்வழிப்படுத்த எழுந்தவையே' என்பதை ஆராய்க.

———



*Nesamony Memorial Christian College, Marthandam*